செய்தி வெளியீடு எண் :- 19 நாள் :- 07-01-2012

## செய்தி குறிப்பு

## தொழில் முனைவோருக்கான இலவச பயிற்சி

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து புதிய தொழில் முனைவோருக்கான " **நீங்களும் தொழில் முனைவோராகலாம்**" என்ற தலைப்பில் இலவச பயிற்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட உள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த 18 முதல் 35 வயதிற்குட்பட்டவர்கள் இந்த இலவச பயிற்சியில் கலந்து கொள்ளலாம். இவர்களுக்கான கல்வித்தகுதி பட்டப்படிப்பு (Degree) அல்லது பட்டயப் படிப்பு (Diploma) ஆகும்.

தொழில் முனைவோராக ஆர்வமுள்ள, தகுதி வாய்ந்த இளைஞர்கள் தங்கள் பெயர், விலாசம், கைபேசி, மின் அஞ்சல், கல்வித் தகுதி, சாதி சான்றிதழ், மற்றும் இரு பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் அந்தந்த மாவட்டத்திலுள்ள, மாவட்ட மேலாளர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்(தாட்கோ) அவர்களிடம் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**விண்ணப்பிக்க கடைசி நாள் 18.01.2012.**

இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள ஆர்வமுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்,
தாட்கோ, சென்னை-101

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9